# காவிரிக்காக களத்தில் நிற்கும் கழகம்! உரிமைகளைக் கைவிட்ட போலி ஜனநாயகன்!

**ஆடிப் பெருக்கு நாளில் காவிரிப் படுகை இப்படியொரு வறட்சியைப் பார்த்ததில்லை. நீர் நிறைந்தோடும் பொன்னி நதி கண்ணுக்கெட்டிய தூரம் வரை மணல் விரிப்பான பாலைவனம் போல காட்சியளித்தது. ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் 18ஆம் நாள் தமிழ்நாடெங்கும் ஆற்றங்கரைகளில் மக்கள் குவிந்து வழிபாடு நடத்துவது வழக்கம். 5 ஆண்டுகால திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் ஆறுகளில் புது வெள்ளம் பாய்ந்தது. விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சியின் முதல் ஆடிப் பெருக்கில் குடத்தில் நீரைக் கொண்டு வந்து ஆற்றில் வைத்து வழிபட வேண்டிய அவல நிலையைத் தமிழ்நாடு கண்டது.**

அகண்ட காவிரி ஓடும் திருச்சி அம்மா மண்டபத்தில் தண்ணீர் இல்லாமல் குழாய் அமைத்து, அதில் ஷவர் போலத் தண்ணீரைக் கொட்டச் செய்து, மக்கள் வழிபாடு செய்ய வேண்டியிருந்தது. தஞ்சை மண்டலம் முழுவதும் இதே நிலைதான். மயிலாடுதுறை காவிரி புஷ்கரத்தில் தொட்டியில் நீரைக் கொட்டி வைத்து ஆடிப்பெருக்கு கொண்டாட வேண்டிய நிலை. திருவாரூரில் ஆற்றில் தண்ணீர் இல்லாததால் கமலாலயம் குளத்தில் ஆடிப்பெருக்கைக் கொண்டாடினார்கள்.

போதிய மழை இல்லாமல் இயற்கை வஞ்சிப்பது புதிதல்ல. முந்தைய ஆட்சிக்காலங்களிலும் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கு முந்தைய தமிழ்நாட்டின் ஆட்சியாளர்கள் யாரும் இவ்வளவு மோசமான முறையில் பொறுப்பற்றத்தனமாக நடந்து கொண்டதில்லை. விஜய் கர்நாடகாவுக்கு செல்கிறார் என்ற செய்தி கேட்டு இயற்கையே கருணை கொண்டு மழையை அள்ளிப் பொழிவதாகவும், கர்நாடகத்தின் கபினி அணை திறக்கப்பட்டதால் தமிழ்நாட்டிற்குள் தண்ணீர் வெள்ளமாகப் பாய்வதாகவும் அமைச்சர்கள் முதல் ரசிகர்கள் வரை பலரும் ரீல்ஸ் போட்டு இமேஜ் பில்டப்பில்தான் கவனமாக இருந்தார்களே தவிர, காவிரி விவகாரத்தில் தமிழ்நாடு சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தவில்லை.

ஜூன் 12ஆம் நாள் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை த.வெ.க ஆட்சியில் ஆகஸ்ட் முதல் வாரம் வரையிலும் திறக்கப்படவில்லை. ஜூன் மாதம் கர்நாடகம் நமக்குத் தரவேண்டிய 9.9 டி.எம்.சி. தண்ணீரைத் தரவில்லை. ஜூலையில் தரவேண்டிய 32 டி.எம்.சி தண்ணீரையும் தரவில்லை. இந்த நிலையில், கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவகுமாரை காவிரி விவகாரம் தொடர்பாக சந்திப்பதற்கு விஜய் அனுமதி கேட்டிருக்கிறார் என்ற செய்தி கசியவிடப்பட்டது. பயணம் உண்மையா என்ற கேள்விக்கு அமைச்சர்கள் ஆளுக்கொரு பதிலைச் சொன்னார்கள். நீர்வளத்துறை அமைச்சராக இருக்கும் ஆனந்த் எந்தப் பதிலும் சொல்லாமல் சிரித்து மழுப்பி தலையாட்டிவிட்டுப் போனார்.

**காவிரி விவகாரத்தில் மேலாண்மை வாரியம், ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றில் முறையிடுவதும், உச்சநீதிமன்றத்தை நாடுவதுமே தமிழ்நாட்டிற்குப் பயன்தரும் அணுகுமுறையாக இருக்கும் என்பதை தி.மு.க தலைவர் வலியுறுத்தினார். கர்நாடக முதல்வரை தமிழ்நாட்டின் முதல்வர் நேரடியாக சந்திப்பது நமது உரிமைகளை விட்டுத் தரும் செயலாகும் என்று கண்டித்தார். தமிழ்நாட்டின் அரசியல் கட்சியினரும் விவசாயிகள் சங்கத்தினரும் இதே கருத்தை வலியுறுத்தினர்.**

கர்நாடகா தரப்பிலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் வருகை குறித்த செய்தி வெளியானதுடன், விஜய்தான் கர்நாடக முதல்வரைச் சந்திக்க அனுமதி கோரியிருந்தார் என்பதையும் தெரிவித்தனர். அத்துடன், தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தரும் வாய்ப்பில்லை என்றும், கர்நாடகத்தில் போராட்டச் சூழல் நிலவுவதால் விஜய் வருவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அம்மாநில அரசு அறிவித்தது. ரீல்ஸ் போடலாம் என நினைத்து விஜய் போட்ட பயணத் திட்டம் நொறுங்கியதால் அவரது இமேஜை காப்பாற்றுவதற்காக, “மழை கொட்டுகிறது. கபினி அணை திறக்கப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டில் தண்ணீர் பாய்கிறது” என ரசிகக்குஞ்சுகள் ரீல்ஸ் போடத் தொடங்கினர்.

தென்மேற்கு பருவ மழைதான் கர்நாடகத்தின் நீர்ப்பிடிப்பு பகுதிகளுக்கு ஆதாரமாகும். இந்த முறை பருவ மழை போதிய அளவிலோ உரிய நேரத்திலோ பெய்யவில்லை. தாமதமாகப் பெய்யத் தொடங்கியதன் விளைவாக, கபினி அணையின் உபரி நீரைத்தான் கர்நாடக அரசு திறந்துவிட்டது. உரிய காலத்தில் தர வேண்டிய உரிமை நீரை வழங்கவில்லை. அப்படித் திறந்து விடப்பட்ட நீரும் வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் வேகத்தில் தமிழ்நாட்டிற்கு வந்துவிடாது. கபினி அணை நீர் மேட்டூர் அணைக்கு வருவதற்கே இரண்டு நாட்களாகும்.

மேட்டூர் அணையின் முழுமையான கொள்ளளவு 120 அடி. குறைந்தபட்சம் 80 அடியைத் தாண்டினால்தான் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும். 100 அடிக்கு மேல் இருந்தால்தான் கடைமடைப் பகுதி வரை தண்ணீர் பாயும். மேட்டூரிலிருந்து கல்லணைக்குத் தண்ணீர் வந்து, அதன்பிறகு டெல்டா மாவட்டங்களில் உள்ள காவிரி மற்றும் அதன் கிளை ஆறுகளில் தண்ணீர் பாய்ந்து, வாய்க்கால்கள் வழியாக வயல்களுக்குச் செல்ல வேண்டும். இதற்கு ஏறத்தாழ ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிடும். அமைச்சர்களாக பொறுப்பில் இருக்கும் த.வெ.க.வினருக்கே இந்த விவரம் எதுவும் தெரியாது. அதனால்தான் **விஜய்க்காக இயற்கையே கருணை காட்டுகிறது என்றும், தமிழ்நாட்டுக்கு தண்ணீர் பாய்ந்து வருகிறது என்றும் ஆகஸ்ட் 1 (ஆடி 16) அன்று ரீல்ஸ் போட்டார்கள். த.வெ.க.வினரின் ரீல்ஸ்க்கும் உண்மைக்கும் சம்பந்தமேயில்லை என்பதை ஆகஸ்ட் 3 (ஆடி 18) அன்று ஆடிப்பெருக்கு நாளில் காய்ந்து கிடந்த ஆறுகள் காட்டிவிட்டன.**



**கோவி.லெனின்**
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

வறண்ட ஆறுகள் மட்டுமல்ல, பயிரிடப்படாமல் தரிசாகக் கிடக்கும் டெல்டா மாவட்ட வயல்களும் கண்ணீர்க் கதைகளைப் பேசுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த 2025ஆம் ஆண்டு 1,64,744 ஏக்கர் பரப்பளவில் குறுவைப் பயிரிடப்பட்டிருந்தது. இந்த 2026இல் ஆண்டு 1,28,692 ஏக்கரில் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் 2025இல் 47,398 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த குறுவை நெல் 2026இல் வெறும் 2,781 ஏக்கரில் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் 2025இல் 1,55,155 ஏக்கர். 2026ல் 88,678 ஏக்கர் மட்டுமே. மயிலாடுதுறை மாவட்டத்தில் மட்டுமே சரியான அளவில் குறுவை சாகுபடி பரப்பளவு பாதுகாக்கப்பட்டுள்ளது. (ஆதாரம் தி இந்து ஆங்கில நாளிதழ் 31.7.2026) காவிரியில் தமிழ்நாட்டிற்கான உரிமைகளை த.வெ.க. அரசு விட்டுக்கொடுக்க முன்வந்ததன் விளைவுதான் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் ஏக்கர் அளவிலான சாகுபடி பரப்பு குறைந்ததற்கு காரணமாகும்.

தி.மு.க. எப்போதுமே காவிரி விவகாரத்தில் உரிமைக் குரலை விட்டுக் கொடுத்ததில்லை. 1968இல் கர்நாடக முதலமைச்சராக இருந்த வீரேந்திரபாட்டீல் முதல், 2006 2021 காலத்தில் எடியூரப்பா முதலமைச்சராக இருந்த காலம் வரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுப்பிய உரிமைக் குரலும் சட்டப்போராட்டங்களும் காவிரியில் தமிழ்நாட்டிற்குரிய பங்கை நிலைநாட்டின.

**காவிரி விவகாரத்தில் நியாயமானத் தீர்வு கிடைப்பதற்கு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று கோரி 1971இல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு. 1990இல் வி.பி.சிங் அரசு அமைந்தபோது அவரிடம் வலியுறுத்தி நடுவர் மன்றத்தை அமைக்கக் காரணமானவரும் முதல்வர் கலைஞர் அவர்கள்தான். 2007ஆம் ஆண்டு நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியானபோதும் கலைஞர் தலைமையிலான தி.மு.க அரசுதான். இதற்கிடையே, காவிரி விவகாரத்தில் தொடர்புடைய மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநில முதல்வர்களைக் கொண்ட காவிரி ஆணையத்தை பிரதமர் வாஜ்பாய் அமைத்தபோது, தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டும் வகையில் அதில் பங்காற்றினார் முதல்வர் கலைஞர்.**

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பில் தெரிவித்த 205 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடகம் மறுத்த போதெல்லாம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழ்நாட்டிற்குரியத் தண்ணீரைப் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுத்தவர் கலைஞர். பிரதமர் இந்திராகாந்தி முதல் பிரதமர் நரேந்திர மோடி வரை அதிகாரத்தில் வலிமைப் பெற்றிருந்தவர்களிடம் தமிழ்நாட்டின் உரிமைகளை வலியுறுத்தி, டெல்டா மாவட்ட விவசாயத்திற்கானப் போதிய தண்ணீரைப் பெற்றுத் தந்தவர் காவிரி மைந்தரான கலைஞர்.

நீண்டகால அனுபவம், முதிர்ச்சியான அணுகுமுறை, நியாயத்தை எடுத்துரைக்கும் சொல்லாற்றல் எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்நாட்டின் நலனை மட்டுமே கலைஞர் முன்னிறுத்தியதால்தான் தேவையான அளவு தண்ணீர் கிடைத்து வந்தது. திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் 5 ஆண்டுகளிலும் உரிய காலத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட்டு டெல்டா மாவட்டங்களில் சாதனை அளவாக குறுவைப் பயிர் சாகுபடி செய்யப்பட்டது.

விஜய் ஆட்சியில் முதிர்ச்சியானவர்களும் இல்லை. தமிழ்நாட்டின் மீதான அக்கறையும் எவருக்குமில்லை. ஜனநாயகன் படம் கர்நாடகாவில் வசூல் பார்க்க வேண்டும் என்பதற்காகவே தமிழ்நாட்டின் அடிப்படை உரிமையை விட்டுக் கொடுத்திருக்கிறது த.வெ.க. அரசு. கர்நாடக அரசு காவிரி மேலாண்மை வாரியத்தின் உத்தரவை மதிக்காமல் இருந்த நிலையில், தி.மு.க. சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் மூத்த வழக்கறிஞரும் மாநிலங்களவை உறுப்பினருமான வில்சன் அவர்கள். இரண்டு நாட்கள் கழித்து, ஆகஸ்ட் 3 திங்கட்கிழமையன்றுதான் தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு போடப்பட்டது. அதற்கு காரணம், சனிஞாயிறு இரண்டு நாட்களும் கர்நாடகாவில் ஜனநாயகன் படத்தின் வசூல் பாதிக்கக்கூடாது என்பதுதான்.

தி.மு.க உள்ளிட்ட தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்தியும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை விஜய் அரசு கூட்ட மறுக்கிறது. விவசாயிகளின் கருத்துகளைக் கேட்க மறுக்கிறது. டெல்லியில் கோரிக்கையை வலியுறுத்த பயணம் மேற்கொண்ட தமிழ்நாட்டின் விவசாயிகள் மகாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் கைது செய்யப்பட்டதற்கு விஜய் அரசிடமிருந்து ஒரு கண்டனம் கூட வெளிப்படவில்லை.

கர்நாடக அரசு உபரி நீரைத் திறந்து விடாமல் தமிழ்நாட்டிற்கு உரிமையான நீரைத் திறந்து விட வேண்டும் எனப் போராடி வருகிறது எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம். கழகத்தின் இளந்தலைவர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆகஸ்ட் 3 அன்று தஞ்சையில் தோழமைக் கட்சியினர் பங்கேற்புடன் மாபெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. போலி ஜனநாயகன் ஆட்சியில் தமிழ்நாட்டின் உரிமைகள் பறிபோகின்றன. காவிரியில் நம்முடைய உரிமைகள் ஒருபோதும் பறிபோகக்கூடாது எனக் களத்தில் உறுதியாக நிற்கிறது தி.மு.க.

---

### தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

## சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தினர் புகழ் அஞ்சலி செலுத்துவீர்!

### மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., அறிக்கை!

*சேலம், ஆக.5-*

*சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*



*ஆகஸ்ட் 7ஆம் தேதி வெள்ளிக்கிழமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள். திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக, தமிழினத்தில் அழியா சொத்தாக, ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராக, உலகமே போற்றும் பன்முகத் தலைவர் செம்மொழி நாயகராக நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் நம் குடும்பத் தலைவரின் நினைவுநாள்.*

*தமிழே மூச்சாக தமிழர் நலமே வாழ்வாகக் கொண்டு இன உணர்வு, மொழி உணர்வு, சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், சாதி ஒழிப்பு என வராற்றில், பொது வாழ்வில் உலக அளவில் அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்த நம் குடும்பத் தலைவருக்கு நினைவு நாள். மாபெரும் தலைவருடைய நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் அண்ணன் மாண்புமிகு தளபதி அவர்களின் ஆணைப்படி வருகிற 7ஆம் தேதி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரது இல்லத்தின் வாயிலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்திட வேண்டும். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு மறைந்தாலும் நம் நெஞ்சங்களிலும், நினைவுகளிலும் நிரந்தரமாகக் குடி கொண்டிருக்கும் தமிழினத் தலைவருக்கு வீடுகள் தோறும் மரியாதை செலுத்திடுவோம்.*

*07.08.2026 தேதி வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியளவில் தாரமங்கலத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*அதுசமயம் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், பூத் டிஜிட்டல் ஏஜென்ட் , கழக முன்னோடிகள், மற்றும் கழக உடன் பிறப்புகள் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்து அழைத்துச் செல்லும் வழியில் விக்கிரவாண்டி அருகே கழக விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் அ.சிவா தலைமையில் கழகத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கிண்டி எம். கோபால்
### ஆகஸ்ட் 5 (1985)



**இளம்வயதில் திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்து பணியாற்றியவர்.**

**1959ஆம் ஆண்டு கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி தேர்தலில் கிண்டி கவுன்சிலராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால் அவரை ‘கிண்டி கோபால்’ என தலைவர் கலைஞர் அவர்களால் அன்பாக அழைக்கப்பட்டவர்.**

**சட்டப்பேரவை உறுப்பினராகவும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்தவர்.**

**1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**